[11th February 1958

Government of Madras thought about giving the same considerations that are recommended by the Second Pay Commission, to the non-gazetted officers whose relief was contemplated in Cabinet deliberations?

THE HON. SRI C. SUBRAMANIAM : I would like to remind hon. Members that it is only very recently that an all-round increase of Rs. 12 in dearness allowance was given to the N.G.Os., and that it costs the Government Rs. 4½ crores per annum. I am sure hon. Members would, during the Budget time, see our resources position and then they may make further suggestions whether it would be possible for us to give any more dearness allowance at present.

SRI A. GOVINDASAMY : மத்திய சர்க்காருக்கு யாதாஸ்து அனுப்பி இருப்பதாக சர்க்கார் தரப்பில் சொல்லப்படுகிறது. அதைப்பற்றிய விவரம் அறியலாமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM : அதைப் பற்றிய விவரம் இப்பொழுது என்னுடைய கையில் இல்லை. அதைப்பற்றி தனியான கேள்வி போட்டால் விவரம் சொல்லுகிறேன்.

SRI M. P. SUBRAMANIAM : சம்பளம் கொடுக்கும் விஷயத்தில் மத்திய சர்க்கார் சிப்பந்திகளுக்கும் மாகாண சர்க்கார் சிப்பந்திகளுக்கும் பாரபட்சம் காண்பிப்பது சரிதானா ? மத்திய சர்க்கார் சிப்பந்திகள் இரண்டாவது சம்பள கமிஷனின் சலுகையை எதிர் பார்த்துக்கொண்டிருக்கும் போது மாகாண சர்க்கார் சிப்பந்திகளுக்கு இன்னும் முதல் சம்பளக் கமிஷனில் சலுகையையே கொடுத்து அமுல் நடத்தாமல் இருப்பது சரிதானா ? அப்படிக் கொடுத்து சலுகை காண்பிக்க இந்த மாகாண சர்க்கார் முன் வரவேண்டாமா ? இப்படி பாரபட்சம் காண்பிப்பது சரிதானா ?

THE HON SRI C. SUBRAMANIAM : நமது சர்க்காருடைய ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க வேண்டியது நம்முடைய பொறுப்பு, அது நமது கையில் இருக்கிறது. இந்த மாகாண சர்க்காரால் எவ்வளவு கொடுக்க முடியுமோ அவ்வளவு கொடுக்கப்பட்டுதான் வருகிறது. அதனால் பாரபட்சம் ஒன்றும் காண்பிக்கப்படவில்லை. சம்பளம் கொடுப்பதில் வடக்கே இருக்கக்கூடியவர்களுக்கும், தெற்கே இருக்கக்கூடியவர்களுக்கும் ஒரே மாதிரியாகத்தான் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு அரசாங்கமும் தங்களுடைய வருவாய்க்குத் தக்கபடி எப்படி சம்பளம் கொடுக்க வேண்டும் எவ்வளவு மக்கள் நன்மைக்கு செலவிடப்பட வேண்டும் எந்த வகையில் பிரயோசனப்படுத்தப்பட வேண்டும் என்பதையெல்லாம் திட்டம் போட்டு வகுத்திருக்கிறது. அதன் மூலம் தான் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. அவ்விதம் எப்படி வருவாயை செலவு செய்யவேண்டும் என்று இந்த சட்டசபை தீர்மானம் மூலமாக தீர்வு கொடுக்க வேண்டியதாக இருக்கிறது.

Non-Gazetted Officers

* 46 *Q*.—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Finance be pleased to state whether there is any proposal to increase the dearness allowance of and to provide amenities such as house-rent allowance or free quarters to all Non-Gazetted Officers in view of the additional Revenue derived by the Government on account of the recommendations made by the Second Finance Commission?

11th February 1958]

THE HON. SRI C. SUBRAMANIAM : There is no proposal to increase dearness allowance. A scheme is already in force from 1947 for grant of house-rent allowance to Non-Gazetted Government servants not provided with rent-free quarters and drawing a pay not exceeding Rs. 150 per mensem stationed in the City or municipalities or taluk headquarters and Revenue Divisional Headquarters which are neither municipalities nor headquarters of taluks. Certain categories of staff of the Jail, Police, Forest, Education, Medical, Agriculture, Cinchona, Fisheries and Public Works Departments are eligible for rent-free quarters. If quarters are not available for allotment to those eligible for rent-free quarters, they are given house-rent allowance. There is, however, no proposal for the provision of free quarters to all Non-Gazetted Officers.

SRI N. K. PALANISAMI : சம்பளத்தையும் அலவன்ஸையும் அதிகப்படுத்தும் விஷயமாக எப்ரல் மாதத்தில் கவனிக்கபடும் என்று கனம் அமைச்சர் அவர்கள் என்.ஜீ.ஓ. கூட்டத்தில் சொல்லியபடி எப்பொழுது செய்து தரப்போகிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்பற்றி இந்த சர்க்கார் மத்திய சர்க்காருக்கு ஏதாகிலும் சிபார்சு செய்திருக்கிறார்களா ? அப்படிச் செய்திருந்தால் அதன் விவரம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : எப்ரல் மாதத்தில் கவனிப்பதாக நான் சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லை. அடுத்த வருஷம் இதைப்பற்றி யோசிக்கப்படும் என்று சொன்னதாகத்தான் எனக்கு ஞாபகம் இருக்கிறது. ஒருக்கால் அடுத்த வருஷம் என்பதை எப்ரல் மாதம் என்று அவர் எடுத்துக்கொண்டார் போலிருக்கிறது. அடுத்த வருஷம் என்பது எப்ரல் மாதத்தில் ஆரம்பித்தாலும் அது மார்ச் மாதம் 31-ம் தேதி வரையில் அந்த வருஷம் நீடிக்கிறது என்பதையும் கவனத்தில் கொள்ளவேண்டும் என்பதைச் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். இதைப்பற்றி மத்திய அரசாங்கத்திற்கு ஒரு யாதாஸ்து சமர்ப்பித்திருக்கிறேன். என்று இதற்கு முன் கேட்ட கேள்விக்கு பதில் சொல்லி இருக்கிறேன். இதைப்பற்றி நாங்கள் மத்திய சர்க்காருக்கு எழுதியிருக்கிறோம்.

SRI M. P. SUBRAMANIAM : டிசம்பர் மாதம் 24-ம் தேதி பத்திரிகை நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் எக்ஸைஸ் மூலமாக வரக்கூடிய ஐந்து கோடி ரூபாயை வைத்துக்கொண்டு அவர்களுக்கு சம்பளத்தை அதிகப்படியாகக் கொடுக்க பரிசீலனை செய்யப்படும் என்று கனம் அமைச்சர் அவர்கள் சொல்லி இருக்கிறார். இதைப்பற்றி ஏதாகிலும் பரிசீலனை செய்யப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI C. SUBRAMANIAM : அம்மாதிரி நான் சொன்னதாக எனக்கு ஞாபகம் இல்லை. பத்திரிகைகளில் வருவதையெல்லாம் வைத்துக்கொண்டு அதை நம்புவது என்பது சரியல்ல. எந்தப் பத்திரிகையில் எப்படி வந்ததோ அதைப்பற்றி எனக்குத் தெரியாது. பத்திரிகைகளில் எதை வேண்டுமானாலும் எழுதுவார்கள். கனம் அங்கத்தினருக்கு இந்த ஐந்து கோடி ரூபாய் வருவதைப்பற்றி மனதில் உறுத்திக்கொண்டிருக்கிறது. ஆனால் ஒன்று மட்டும் நான் சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். எக்ஸைஸ் வரி மூலமாக நமக்கு ஐந்து கோடி ரூபாய் கிடைப்பதில்லை என்பதை மட்டும் சொல்லிக்கொள்ளுகிறேன்.

MR. SPEAKER : Further, it is not correct to refer to Press Interviews and reports in asking questions in this House. The hon. Member may ask a separate question without making any reference to the supposed Press Interview.

[11th February 1958

SRI A. R. SUBBIAH MUDALIAR : இங்கு அசெம்பளி நடக்கக்கூடிய காலங்களில் அசெம்பளி செக்ரடேரியட் சிப்பந்திகள் அதிக நேரம் வேலே பார்க்க வேண்டியதாக இருப்பதால் அவர்களுக்கு ஏதாகிலும் சலுகைகள் காண்பிக்க சர்க்கார் யோசிக்குமா ?

THE HON. SRI C. SUBRAMANIAM: ஏற்கெனவே கேட்ட கேள்விக்கும் இப்பொழுது கேட்கப்படுகிற கேள்விக்கும் சம்பந்தம் இல்லே. இதைப்பற்றி தனிக் கேள்வி கேட்டால் அதிற்கு பதில் சொல்லப்படும்.

Rural Dispensaries

* 47 *Q*.—SRI V. K. KOTHANDARAMAN : Will the Hon. the Minister for Revenue be pleased to state whether the Government propose to run all the rural dispensaries themselves?

THE HON. SRI M. A. MANICKAVELU : No, Sir.

SRI V. K. KOTHANDARAMAN : பல ரூரல் ஆஸ்பத்திரிகளில் டாக்டர்கள் இல்லே. பல ஆண்டுகளாக அப்படி டாக்டர்கள் இல்லாமல் பல ஆஸ்பத்திரிகள் இருக்கின்றன. அதற்குக் காரணம் டாக்டர்களுக்கு போதுமான சம்பளம் கொடுக்கப்படாமல் இருப்பதுதான். அதனுல் டாக்டர்களுக்கு அதிகப்படியான சம்பளம் கொடுக்க சர்க்கார் முன் வருமா?

THE HON. SRI M. A. MANICKAVELU : சம்பளம் அதிகப்படியாகக் கொடுக்கப்படவேண்டுமென்ருல் அது நிதி மந்திரி அவர்களுடைய விஷயம். தாலுகா ஹெட்குவார்டர் ஆஸ்பத்திரிகளே யெல்லாம் இப்பொழுது சர்க்கார் எடுத்துக்கொண்டு நடத்தி வருகிறது. அது இன்னும் பூர்த்தியாகவில்லே. ரூரல் டிஸ்பென்சரிக்கு எல்லாம் மருந்து கொடுப்பது லோகல் போர்டின் வேலே. அவைகள்தான் அதற்கு ஜவாப்தாரி. டாக்டர்களுக்கு மாத்திரம்தான் சர்க்கார் சப்சிடி கொடுக்கிருர்கள். பிரைமரி சென்டர்களில் உள்ள ஆஸ்பத்திரிகளுக்கு டாக்டர்கள் கிடைப்பது அரிதாக இருக்கிறது.

SRI P. S. SANTHANAM : மருத்துவ விடுதிகளுக்கு டாக்டர்கள் வராத காரணம் என்னவென்ருல் அங்கே வரக்கூடிய டாக்டர் களுக்குத் தக்க வசதிகள் கிடையாது. குடியிருப்பதற்கு வீடுகள் கிடையாது. இந்தக் காரணங்களினுல் அரசாங்கம் அங்கே டாக்டர்களே அனுப்பினுலும் டாக்டர்கள் அங்கு செல்லமாட்டேன் என்று சொல்லி விடுகிருர்கள். அதனுல் டாக்டர்களுக்கு அங்கேயெல்லாம் குடியிருக்க வசதி செய்து கொடுப்பதோடு மற்ற இதர வசதிகளேயும் செய்து கொடுக்க சர்க்கார் முன் வருவார்களா?

THE HON. SRI M. A. MANICKAVELU : கூடுமான வரையில் பிரைமரி சென்டர்கள் இருக்கும் இடங்களில் அம்மாதிரி ஏதாகிலும் செய்யலாம் என்ற உத்தேசம் சர்க்காரிடம் இருந்துகொண்டிருக்கிறது.

SRI A. V. P. PERIYA GURUVALA REDDIAR : கிராமங் களில் இருக்கக்கூடிய ரூரல் டிஸ்பென்சரிகளுக்கு எம்.பி.பி.எஸ். படித்த டாக்டர்கள் வந்து வேலே பார்ப்பதற்கு ஒருவரும் சம்மதிப்பது இல்லே. ஆகையினுல் கிராமங்களில் உள்ள ஆஸ்பத்திரிகளெல்லாம் மூடி கிடக்கின்றன. ஆகையினுல். அதற்கு பதிலாக அங்கு ஆயுர்வேதம், ஹோமியோபதி படித்த டாக்டர்களேயாவது நியமிக்க சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. A. MANICKAVELU : ரூரல் டிஸ்பென்சரி இருக்கும் இடங்களில் எல்லாம் டாக்டர்களின் தொகை குறைவாக இருந்தால் அங்கே யெல்லாம் ஹோமியோபதி டாக்டர்களே நியமித்து அதன் மூலம் அதை சரி செய்ய முடியுமா என்பதையெல்லாம் பற்றிய ஒரு விதமான யோசனே இருந்துகொண்டிருக்கிறது.